சித்த மருத்துவ அகராதி

(க - கௌ)

தொகுதி - 3

இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை
சென்னை - 600 106.

specimen

தமிழ் மருத்துவ நூல் வரிசை - 18

சித்த மருத்துவ அகராதி

(க - கௌ)

தொகுதி - 3

வெளியீடு :

சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை

சென்னை - 600 106

2008

பதிப்புத் தகவல்

நூல் பெயர்	:	சித்த மருத்துவ அகராதி (தொகுதி - 3)
பதிப்பு	:	சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு, இந்திய மருத்துவம், ஓமியோபதித்துறை, சென்னை - 106.
பதிப்புரிமை	:	தமிழ் நாட்டரசு
பொருள்	:	சித்த மருத்துவ சொற்பொருள் விளக்கம்
பதிப்பாண்டு	:	முதற்பதிப்பு, 2008
பக்கங்கள்	:	182
படிகள்	:	1000
தாள் அளவு	:	டெம்மி 1x8
அச்சுப் புள்ளி	:	12 புள்ளி
விலை	:	ரூ. 55.00
கட்டமைப்பு	:	சாதாரண அட்டைக்கட்டு

அச்சிட்டோர்: யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ்
189 (101-D), ராயப்பேட்டை நெடுஞ்சாலை
லஸ், மயிலாப்பூர், சென்னை - 600 004.
✆ : 24661807, 24987562

ஜி.ஏ. ராஜ்குமார், இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர்.

இந்திய மருத்துவம் மற்றும்
ஓமியோபதி ஆணையரகம்,
சென்னை - 600 106.

பதிப்புரை

சித்த மருத்துவ அகராதி எனும் பெயர் கொண்ட இந்நூல் அகராதித் தொகுப்பு நூலாகும். இதன் முதல் தொகுதி (அகரம் மட்டும்) 1992 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக ககாரம் முதல் கௌகாரம் வரையுள்ள சொற்கள் மூன்றாம் தொகுதியாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அகராதி, இதுகாறும் வெளிவந்துள்ள மருத்துவ அகராதிகள், வெளிவராத ஓலைச் சுவடியிலுள்ள அகராதிகள், தமிழ் அகராதிகள் போன்றவற்றினின்றும் சொற்களைத் திரட்டி வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல் மருத்துவத் தாரவங்கள் (மரம், செடி, கொடி போன்றன) சரக்குகளின் பெயர்கள், நோய், மருந்து பெயர்கள் போன்றவற்றை உள்ளடக்கிய தொகுப்பாகத் திகழ்கின்றது.

சில நேரங்களில் ஒரே சொல்லிற்கு ஒன்றிற்கும் மேற்பட்ட பொருட்கள் அமையும். அவ்வாறு அமையும்போது அவை அகர வரிசைப் படுத்தப்படாமல் இயல்பு நோக்கியும், இன்றியமையாமை கருதியும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள சில சொற்கள் மற்றும் பொருட்கள் இன்னவென்று முழுமையாக உணர இயலவில்லை. அவ்வாறான இடங்களில் அந்தச் சொற்கள் உடுக்குறி (✸) இட்டுப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறான, பொருள் புலப்பாடில்லாத சொற்கள் பதிப்பிக்காது விடப்படுமாயின் ஒரு சொல்லாட்சி மறைந்துவிடக்கூடுமே என்பதற்காக அச்சேற்றப்பட்டுள்ளது. அவ்வாறான சொற்களின் சரியான வடிவங்களைக் கற்று வல்லோர் தர முன்வருவராயின் நாம் அவர்க்கு நன்றிக் கடப்பாடுடையோம் ஆவோம்.

பாடலாகவோ, உரைநடையாகவோ இருக்குமாயின் அதன் தொடர்ச்சியை வைத்து அது என்ன சொல்லாக இருக்கும் என்று ஊகிக்க இடமுண்டு. ஆனால் சொற்பொருள் விளக்கும் அகராதியில் சொல்லே புரியாதபோது ஊகித்துணர வழியில்லை. எனவேதான் அவ்வாறான சொற்கள் உடுக்குறியுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இப்பணிக்குத் துணைபுரிந்த இணை இயக்குநர், சிறப்பு அலுவலர் (மொழி பெயர்ப்பு), ஆய்வு மருத்துவ அலுவலர், தமிழ்ப் புலவர்கள், நகலெடுப்போர் யாவருக்கும் மற்றும் உரிய நேரத்தில் அச்சிட்டு வழங்கிய யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் எனது வாழ்த்துகள் உரித்தாகட்டும்.

7/02/08. சிறப்பு ஆணையர்

இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை,
சென்னை - 600 106.

சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

நூலாக்கப் பணிக்குழு

பதிப்பாசிரியர்
முனைவர் மரு. ஆனைவாரி ஆனந்தன், பிஎச்.டி.
சிறப்பு அலுவலர் (மொழிபெயர்ப்பு)

கூர்ந்தாய்வு மருத்துவ அலுவலர்
மரு. பி.ஆர். சகுந்தலா, எம்.டி. (சி)

உதவி பதிப்பாசியர்கள்
திரு. த. அழகப்பராசு, M.A., M.A., M.L.I.S., M.Phil., B.Ed.
திருமதி செ.இரா. பிரசன்னா, M.A., M.Phil., B.Ed.,

சுவடி நகலெடுப்போர்
திரு. வெ. சாரங்கபாணி
திருமதி த. லெட்சுமி
திருமதி நா. பாக்கியசுந்தரி, B.A.

மருத்துவ அகராதி

(க – கௌ)

பாகம் - 3

க - உடல், சூரியன், தீ, காற்று, மயில், மனம், ஒன்று (தமிழ் எண்களில் 1 என்பதைக் குறிக்கும்)

கஃசு - கால்பலம்

கஃரூபா - கற்பூரமணி, இது வடமொழியில் திருணமாரி என்று அழைக்கப்படும்.

கஃறு - கறுமை

கக - மஞ்சள், குங்குமம்

கககலவாய் - மஞ்சள் கலவாய் மீன்

ககண்ணன் - ஒருபூடு

ககதி - கருடன்

ககபதி - கருடன், இராசாளிப் பறவை, கருடக்கொடி, பெருமருந்து

ககபம் - ஒருவகைக் கிழங்கு

ககபாரி - மருதமரம்

ககபீசம் - கிரந்திநாயகம்

ககமரதம் - மணித்தக்காளி

ககமூங்கில் - ஈத்தற்கள்ளி

ககமூலி - கிருமிகளின் எதிரி (மூலிகையை அரிய இயலவில்லை)

ககம் - சரகண்ட பாஷாணம், பறவை, மணித்தக்காளி, மஞ்சள், அம்பு

ககம்பு - கடம்புலி

ககராகம் - கொள்ளு

ககராசன் - கருடன், இராசாளி, கருடக்கொடி, பெருமருந்து

ககரி - அவரை

ககரிமல்லிகை - மலைமல்லிகை

ககவசுகம் - ஆல்

ககளப்பிரநிறத்தி - ஆதொண்டை

ககனம் - துத்தநாகம், அப்பிரகம், ஆகாயம், வாயு, காடு, ஒருவகைக் கிழங்கு

ககனாகம் - துத்தநாகம்

ககனார விந்தம் - அந்தரத்தாமரை, ஆகாயத் தாமரை, கொட்டைப்பாசி, வெடியுப்பு, பளிங்கு

ககன் - சூரியன், கதிரவன்

ககாரம் - மாமரம்

ககாரி - அஞ்சனபாஷாணம்

ககிபினி - திப்பிலி

ககிரிநாயகம் - பங்கம்பாளை

ககின் - கரிவலங்காய்

ககுஞ்சலம் - வானம்பாடி

ககுத்தம் - முதுகு, ஒருபறவை

ககுத்து - நாக்கு, திமில்

ககுத் துருமம் - நரி, பூடு, திமில் உள்ள எருது

ககுபம் - மருதமரம், கருமத்தி, கடுக்காய்ப்பூ, செய்யத்தி, அமுக்கிரா, கருமருது, திசை

ககுபாண்டம் - கூசினி

ககுபுங்கு – மருந்து

ககேசன் – கருடன்

ககேருகம் – வயிற்றுப்புழு

ககோதரம் – பாம்பு

கக்கட்டி – அக்குள்கட்டி

கக்கடிதம் – பேரீச்சம்பழம்

கக்கம் – வெள்ளி, அக்குள், எண்ணெய்க்கசடு

கக்கரி – வெள்ளரி, முள்வெள்ளரி, குண்டை வெள்ளரி, நரிவெள்ளரி, ஒருவகை நாய், மாமரம்

கக்கரிக்குடை – வெள்ளரி

கக்கரிக்குண்டம்
கக்கரிக்காய் } – வெள்ளரிக்காய்

கக்கலாது – கரப்பான்

கக்கல் – வாந்தி, இருமல், கக்கப்பட்டது.

கக்கல்நோய் – கக்குவான்

கக்கவருணி – பிடரி

கக்கவரோகம் – கக்குவான்

கக்கவைத்தல் – வாந்தியுண்டாக்கல்

கக்கா – மாமரம்

கக்கார் – தேமா, இனிமா, புளிமா, கெச்சக்காய், கழல்கொடி

கக்காரம் – சங்கு, தினை, மாமரம்

கக்காலாத்து – கரப்பான் பூச்சி.

கக்கிசம் – அகத்தியரின் மாந்தீரிக நூல், எருமை, தான்றி, அக்குள்கட்டி

கக்கிடவித்தை– இரசம் கட்டும் வித்தை

கக்கிரி மூலி – இரசத்தைக் கட்டும் மூலி

கக்கிருமல் – ஒருவகை இருமல் நோய், உண்ட உணவை கக்கச் செய்யும் ஒரு வகை இருமல். (இது ஒரு வகை குழந்தைப் பிணி) கக்குவான்.

கக்கு – கக்கல், கக்குவான், கற்கண்டு

கக்குதல் – கக்கல், விஷங்கக்கல், இருமல்

கக்குவாய் – கக்கிருமல்

கக்குவான் – கக்கல்நோய், சளி, இருமல் தொடர் பானது. குழந்தைகட்கு ஏற்படக் கூடிய தொற்று நோய், 3 மாதங்கள் கூட நீடித்திருக்கும் தன்மையுடையது.

கக்குரு – மஞ்சள், நாயுருவி

கக்கூசுப்
படை } – மலத்தானத்தில் ஏற்படும் படை

கக்கூசுப்பற்று–கக்கூசுப்படை

கக்கோரம் – மாமரம்

கங்கடிக்காய் – சிறு தும்மட்டிக் காய்

கங்கடிகம் – குருந்தொட்டி

கங்கணம் – நீர்வாழ் பறவை, வளை

கங்க பத்திரம் – உமி, பருந்தின் இறகு, அம்பு

கங்கம் – கமுகு, கோளக பாடாணம், பருந்து, தீப்பொறி, மரணம், பெருமரம், வெள்ளி, சீப்பு

கங்கரம் – மோர்

கங்கர் – பக்குவப்படாத சுக்கான் கல், பருக்கைகல்

கங்கவி – பருந்து

கங்கன் – பிறவிச் சீர்பந்த பாடாணம்

கங்காணம் – குதிரை

கங்காதரன் – சிவன்

கங்காள மூலி – சிவகரந்தை

கங்காளி – காளி

கங்காளம் – முழுஎலும்பு, எலும்புக் கூடு, எலும்புக் கோர்வை

கங்காளன் – துரிசு, முழுஎலும்பு, சிவன்

கங்கானதம் – பருத்தி

கங்கானம் – குதிரைவாலி

கங்கிஷம் – சிறுவழுதலை, கண்டங்கத்தரி

கங்கு – தினை, கருந்தினை, பருந்து, கோரோசனை, கறுந்தி, வயலின் (கழனி) (வரம்பு, வரம்பின்பக்கம், வரம்பை கிராம பேச்சு வழக்கில் வரப்பு என அழைப்பர்.)

கங்குகம் – தினை, கொம்பு

கங்குஷம் – புங்கு

கங்குஷ்டகம் – கோட்டம்

கங்குஷ்டம் – புங்கு

கங்குஷ்பம் – கோட்டம்

கங்குட்டம் – ஒருவிதக்காவி, மணிப்புங்கு

கங்குணம் – நான்முகப்புல்

கங்குணி – கங்குளி, சோதிஷ்ப மத்திவிரை

கங்குநோய் – உடலில் சாம்பல் நிறமான கொப்புளங்-களை உருவாக்கும் ஓர் வகைத் தீ

கங்குபதிரம் – பருந்தின் இறகு

கங்குபலா – கானற்பலா

கங்குபனை – அடுக்குப்பனை

கங்குர் – தினை

கங்குல் – இரவு, இருள், விடிகாலை

கங்குல் விழிப்பு – கோட்டான், கூகை

கங்குளா – ஓர்வகை யூனானிக் கடைச்சரக்கு

கங்குளி – சிறுவாலுளுவையரிசி

கங்குற் சிறை – சந்திரகாந்தி, சந்திரன்

கங்குனி – வாலுளுவை மரம்

கங்குனி பத்திரம் – ஒருவகைபூடு

கங்குனிறம் – கருப்புநிறம்

கங்கேரு – ஓர்விதக் காக்கை

கங்கேலி – அசோகமரம்

கங்கை - ஓர் சிறந்த ஆறு, சிவனின் மனைவி

கங்கைச் சாற்றி - மணித்தக்காளி

கங்கை நிலம்
கங்கை நீருப்பிசம் } - கோதுமை

கங்கை பாலிலை - சதுரக்கள்ளி

கங்கைமீட்டான் - தண்ணீர்விட்டான் கிழங்கு

கங்கையோன் - துரிசு

கங்கைவழி - சந்திர அமிர்தம்

கங்கொபியம் - குதிரை

கங்கொளி - துரிசு, அசோகு

கங்கோலம் - வால்மிளகு

கங்கை - நவச்சாரம், மருந்து, நிலக்கடம்பு

கங்கைகுணம் - நவச்சாரம், பற்று

கச - கன்னி வெருகு

கசகசா - கசகசா செடியின் விதை

கசகணை - யானைத்திப்பிலி

கசகசோபிதம்- கிராம்பு

கசகபாலி - கிளிமுருக்கு

கசகம் - வெள்ளரி, கருங்கொள், ஒரு வகை காளான்

கசகரணி - வெருகஞ்செடி, வெருகங்கிழங்கிலிருந்து இறக்கும் ஓர் தைலம்

கசகரிகம்
கசகரீகம் } - கக்கரி

கசகன்னி - வெருகு, வெருகஞ்செடி

கசகிறீபம் - தகரிகை

கசக்கரா - தேமா

கசக்கின்ற கொடிச்சி - செந்திராய்

கசக்குஞ்சிதம் - வெண்மொச்சை

கசக்குமுப்பு - திவாலவணம்

கசங்கம் - பீநாறி

கசங்கு - இந்து, காட்டு ஈந்து

கசங்குகண்ணி - தொட்டாற் சிணுங்கி

கசங்கு தட்டு - ஈந்தின்ஈர்க்கு

கசடறுக்கு மண் - உழமண்

கசடறுத்தல் - அழுக்குப் போக்கல், சுத்தி செய்தல், மனத்தின் மாசு போக்கல்

கசடு - அடிவண்டல், வயிற்றிலுள்ள மலம், தழும்பு, கபம், குற்றம், யானை, மயிர், சயரோகம்

கசட்டம்புல் - கக்கு நாறிப்புல்

கசட்டை - இளமை, கசப்பு, துவர்ப்பு

கசதந்தபலம் - வெள்ளரிக்காய்

கசதந்தை - வெள்ளெருக்கு

கசத்தை - அபின்

கசநாகம் - தினை

கசந்தகொடிச்சி - செந்திராய்

கசந்த துவரை - பேய்த்துவரை

கசந்தவா கெண்ணெய்
கசந்தவெண்ணெய் } - வேப்பெண்ணெய்

கசபட்சி - அந்துரு, யானை வணங்கி

கசபுடம் - *1000* எருமுட்டை (வரட்டி) வைத்து எரிக்கும் புடம்

கசப்பி மயிர்ச்சிகைப்பூடு, வேம்பு, பேய்ப்பீர்க்கு, சிறுவாலுளுவை, வல்லாரை, தும்பை, கருங்காலி, பேய்த் தும்பை, பொன்னூமத்தை, காசித்தும்பை

கசப்பிரியம் – சாமை, அந்துரு

கசப்புக்கரிஞ்சான் – யூனானி மூலிகை

கசப்புக்கிச்சலி – தஞ்சாவூர் நாரத்தை

கசப்புக்கும்மட்டி – பேய்க்கும்மட்டி

கசப்புக் கெண்டை – கருங்கெண்டை

கசப்புக் கையான் – கசப்புக்கரிசாலை

கசப்புக் கொடிச்சி – செந்திராய்

கசப்புக்கொள் – பேய்க்கொள்

கசப்புச்சீரிகம் – கசப்புவெள்ளரி

கசப்புத்திரு – சிவதைவேர்

கசப்புத்துவரை – பேய்த்துவரை

கசப்புத்தோதிகம் – கசப்பெலுமிச்சை

கசப்புப் பாரிதம் – வேப்பமரம்

கசப்புப் பாலை – பேய்ப்பாலை

கசப்புப் பீர்க்கு – பேய்ப்பீர்க்கு

கசப்புப் போளம் – கரியபோளம்

கசப்பு மஞ்சரி – பேய்க்கொம்மட்டி

கசப்பு முருங்கை – புனல் முருங்கை, பேய் முருங்கை

கசப்பு மூலிகை – கசப்புக் கையான், கச்சாந்தகரை

கசப்பு வாருதி – வேம்பு

கசப்பு வெப்பீரிகம் – கருப்பு கரிசலாங் கண்ணி

கசப்பு வெள்ளரி – காட்டு வெள்ளரி

கசப்பு வேர் – சிகப்பு ரோகணிச் செடியின் வேர்

கசப்பூலிகம் – மிதிபாகல்

கசப்பெலுமிச்சை – காட்டெலுமிச்சை

கசப்பைந்து – நொச்சி, வேம்பு, கண்டங்கத்திரி, சீந்தில், பேய்ப்புடல் ஆகிய ஐந்து கசப்புப் பூடுகள்

கசமாடம் – ஊமத்தை

கசமாது – கசமாதுகம், ஊமத்தை

கசமாதுகம் – ஊமத்தை

கசமாலம் – புகை

கசமுகத்திப்பிலி – யானைத்திப்பிலி

கசமேடு – ஊமத்தை

கசம் – யானை, ஈளைநோய், காசம், சயநோய், தாமரை, மயிர், புடம்போடும் குழி, இரண்டு முழுஅளவு, புண்தழும்பு, காய்ந்த புண், தோல் நோய், கடுகு.

கசம்புரி – ஆமணக்கு

கசம்பி – கருவண்டு

கசராகம் – கொள்ளு, தினை

கஷரி – தார்காந்தம், முத்துச்சிப்பி

கசரிபு – சிங்கம்

கசருகம் – கொள்ளு

கசரோகம் – கயரோகம்

கசர்ப்பம் – மஞ்சள்

கசலாமயம் – காடி

கசவம் – கடுகுச் செடி, கடுகு

கசவாகிதம் – கலியாண முருங்கை

கசவை - நிலப்பூசனி
கசற்பம் - மஞ்சள்
கசனசித்து - பெரும்புல்
கசனம் - துத்தநாகம்
கசனாகம் - தினைக்கொள்ளு
கசா - கசகசா
கசாசனம் - அரசமரம்,
கசாப்பம், கசாபம், கசாமம் } - மஞ்சள்
கசாயக்கிராயினம் - மாஞ்சரோகிணி
கசாயதித்தம் - விஷ்ணுகரந்தை, வெள்வேல்
கஷாயமதுரம் - வெண்ணெய்
கஷாயம் - மஞ்சள், குடிநீர்
கஷாயர் - மஞ்சள்
கசாயவா - பேரீந்து
கசாயானி - பவழமறுகு
கசாலை - சமைக்குமிடம்
கசான்னம் - அரசு
கசி - ஈரமூரல்
கசிதம் - துடுப்பு, மிருதார்சிங்கி
கசிந்து - பொன்
கசியபவம் - யானைத்திப்பிலி
கசியம் - கள்
கசிரம் - கடம்பு, வாலுளுவை
கசிரி - செம்புளிச்சை
கசிரிகா - சிறுவழுதலை
கசிவு - வியர்வை, அழுதல்
கசு - காற்பலம் (1/4 பலம்)
கசுத்தை - அபினி
கசுமலம் - அழுக்கு, மயக்கம்
கசும்பகம் - அக்காப்புல்
கசூரணம் - குங்குமப்பூ
கசூரம் - பேரீச்சம்
கசேரிகை - முதுகெலும்பு
கசேரு - முள்ளந்தண்டு
கசேருகம் - தமரத்தை, நெம்மட்டிக் கிழங்கு
கசேவம் - கற்றாமரை
கசை - பசை, தசை,அபினி
கசைதசை - அபினி
கசைமுறுக்கி - தட்டான்குறடு
கசோதம் - புறாமுட்டி, பிராய்முட்டி
கசோதிகம் - கருப்பெள்ளு
கசோரம் - ஒருபூடு
கச்சகட்டைமரம் - சின்னாஞ்சி
கச்சகம் - குரங்கு
கச்சகர் - கொள்ளு
கச்சக்கடாய் - ஆமையோடு
கச்சக்குமிட்டி - தலைவிரித்தான் (அல்) ஒருவகைக் குமட்டி
கச்சங்கோரை - உப்பங்கோரை
கச்சசாலி - சிகப்புநெல்
கச்சச்செல்வம் - மீனெலும்பு
கச்சட்டம் - கோவணம்
கச்சண்டம் - அலரி
கச்சதாரம் - நறுவளி
கச்சதுஷன், கச்சதூஷன் } - தவளை
கச்சத்திரங்கம், கச்சத்தினங்கம் } - மீனெலும்பு

கச்சநாரத்தை – கருப்பு நாரத்தை, இளநாரத்தை

கச்சந்தி – சிறுகோணிப்பை

கச்சந்திராய் – ஓர்வகைக் கசப்புத்திராய்

கச்சபம் – ஆமை, ஆமையோடு, மேல் வாயில் காணும் வீக்கம், வாலைக் கருவி, தோல் நோய், பரு, சினப்பு, கடலாமை, பெண்ணாமை.

கச்சப்பிரகண்டம் – அலரி

கச்சமரம் – உலர்மா

கச்சம் – கடுகுரோகணி, பொடி- மீன், அளவை, காய்ச்சற் பாஷாணம், பேய்ப் பீர்க்கு, மீனெலும்பு, அபினிச்செடியின் விதை, சங்கபாஷாணம், மரக்- கால், முலைக்கச்சு, ஆமை, இறகு, நந்தியாவட்டம்

கச்சம்பம் – ஆமை

கச்சரம் – மோர்

கச்சலம் – ஓர்வகை மீன், கண்மை

கச்சலி மாத்திரை } பிரமமுனி வைத்தியத் தில் சொல்லப்படும் ஒரு மாத்திரை

கச்சல் – கச்சலி, கசப்பு, இளம்பிஞ்சு, ஒல்லி, வாழைக்கச்சல், பொடிமீன்

கச்சவடம் – குழம்புதல், அரக்காம்பல்

கச்சளம் – அரக்காம்பல், கண்மை, இருள், புகைக்கரி

கச்சறகோரை – கோரை

கச்சற்கொடி – கழற்சிக்கொடி

கச்சன் – ஆமை

கச்சா – பச்சை, இழிவான, குறைந்த

கச்சாந்தகரை – கசப்புகையாந்தகரை

கச்சாம்பரம் – சந்தன அத்தர்

கச்சாயம் – ஓர்வகைத் தித்திப்புப் பணியாரம்

கச்சாய வாசன் – பொன்னம்பர்

கச்சாலம் – சுரபாஷாணம், கச்சற் பாஷாணம்

கச்சரி – நெருப்பு

கச்சான காயம் – வெங்காயம்

கச்சி – சீந்தில், வெண்காரவுள்ளி, கணுக்கால் எலும்பு, கொட்- டாங்கச்சி, சின்னி, கருங்குசம், வெண்கலம்

கச்சிகந்தகம் – பச்சை கந்தகம்

கச்சிக்கிழங்கு – சின்னிக்கிழங்கு

கச்சிரக கெந்தகமூலா – பிடங்கு நாறி

கச்சில் – ஈந்து

கச்சினார் – சீமை அத்தி

கச்சீ – சீந்தில்

கச்சீவம் – பளிங்குக்கல்

கச்சு – இடைக்கட்டு, முலைக்கட்டு, சிரங்கு, அரைப்பட்டி, கசப்புச் செடி

கச்சுகம் – மாமரம், தினை

கச்சுக்காய் – கழற்சிக்காய்

கச்சுக்காரம்– கசலக்கீரை

கச்சுதா – சிலேட்பம், புளிவஞ்சி

கச்சுமதி - பூனைக்காலி

கச்சுமம் - அகத்தி

கச்சுரம் - அசட்டுப்புண், கிரந்தி, கச்சோலம், பூனைக் காஞ்சொறி

கச்சுரி - ஒட்டொட்டிப்புல்

கச்சுரு - நெருப்பு

கச்சுரை - பெருங்காஞ்சொறி

கச்சுவி - ஓர்வகை உணவுக் கிழங்கு

கச்சூரகம் - சிறுகச்சோலம், கிச்சிலிக் கிழங்கு

கச்சூரக்காய் - உலர்ந்த பேரீந்து, பேரீச்சங்காய்

கச்சூரம் - கழற்சிக்கொடி, சிறுகச்சோலம், பேரீச்சம்பழம், பேரீந்து

கச்சூரா - பெருங்காஞ்சொறி

கச்சூரி - ஒட்டொட்டி

கச்சை - உடல்தழும்பு, கயிறு, நாடாக் கயிறு, பச்சைக்கற்பூரம், அரைக்கச்சு, அபின்

கச்சை கட்டை - சின்னாஞ்சி

கச்சோடி - வெள்ளைவெற்றிலை

கச்சோடு - மட்டமானவெற்றிலை

கச்சோணி - வாசனைப் பண்டம்

கச்சோதம் - மின்மினிப்பூச்சி, சுழல் வண்டு

கச்சோரம் - கிச்சிலிக்கிழங்கு, சீமைக் கிச்சிலிக்கிழங்கு, கற்பூரக் கிச்சிலிக் கிழங்கு

கச்சோல புட்டில் - கடல் சில்லு

கச்சோலம் - கத்தூரி மஞ்சள், நெல்லிப் பருப்பு, பச்சிலை, ஏலத்தோல், பச்சைப் பூலாங் கிழங்கு, சாதிக்காய்த்தோல், மாஞ்சில், ஓர் வாசனைப் பண்டம், கிச்சிலிக் கிழங்கு, உளுந்து.

கச்சோளம் - கிச்சிலிக்கிழங்கு, மாஞ்சில், ஏலத்தோல்

கச்சோளி - வாசனைப் பண்டம்

கஸ்தூரி - கத்தூரி, மிருகம், உபரசம், செவ்வலரி

கஸ்தூரிகை - கத்தூரி, தக்கோலம்

கஞரம் - கள்

கஞரல் - எழுச்சி, கடுப்பு

கஞல்லுதல் - எழுதல், தேய்த்தல், கோபித்தல், அதிகமாதல்

கஞறம் - கள், புளித்தமது

கஞ்சகம் - சிலந்தி, கண்ணிலிடும் ஒரு மருந்து, வெண்கலம், சுண்டை, கறிவேம்பு, ஆமணக்கு

கஞ்சக்கலம் - வெண்கலப்பாத்திரம்

கஞ்சக்குளந்தில் - மணப்பருப்பு, நெல்லிமுள்ளி

கஞ்சங்குலை - கஞ்சாவேர்

கஞ்சங்குல்லை - கஞ்சாங்கோரை

கஞ்சங்குளத்தில், **மணிப்பருப்பு** } நெல்லிமுள்ளி

கஞ்சங்கெள்ளி - கஞ்சா

கஞ்சங்கோணிதம் - ஓரிலைத் தாமரை

கஞ்சசரணம் - கொண்டல்

கஞ்சடம் - ஒருவகைபூண்டு

கஞ்சணம் - கருங்குருவி, கண்ணாடி

கஞ்சநிமிளை - வெங்கல நிமிளை, காக நிமிளை

கஞ்சநீர் - குமரிநீர்

கஞ்சநீலம் - துரிசு

கஞ்சந்திராசம் - கடுக்காய்ப்பூ

கஞ்சபாதனம் - ஒருகால் முடம்

கஞ்சமலர் - தாமரைப்பூ, கோரைக் கிழங்கு சாறு

கஞ்சம் - தாமரை, நீர், வெண்கலம், கஞ்சா, துளசி, சீந்தில், சிலந்தி, அமிர்தம், கஞ்சாங் கோரை, கற்கடகபாடாணம், வட்டப்பம், கல்லுள் படரும் ஒரு மூலிகை, உலோகம், துத்தநாகம், தாழை, குடிக்கும் பாத்திரம், கூஜா, நாகமும் செம்பும் சேர்ந்த கலவை, செம்பு, வெண்டாமரை

கஞ்சரம் - சேம்பு, பொன், தாமரை, செம்பு, சிலந்தி நாயகம், வயிறு

கஞ்சரன் - கஞ்சாங்கோரை

கஞ்சரீடம் - வலியான் குருவி, வயற் குருவி, கரிக்குருவி, வாலாட்டுக் குருவி

கஞ்சல் - குப்பை

கஞ்சவதனம்- தாமரை முகம்

கஞ்சவம் - சூல், காடி

கஞ்சவாசம் - வெண்கலம்

கஞ்சனம் - கரிக்குருவி, வலியான், கண்ணாடி, மெருகிட்டத் தகடு.

கஞ்சனித்த வண்ணான் - சவர்க்காரம்

கஞ்சனை - கண்ணாடி, தூபகலசம், கழற்சிப்பாலை

கஞ்சறுப்பான் - கழுதைப்பால்

கஞ்சா - கள், போதைப்பொருள், சாராயம், கோரக்கர்மூலி, ஊரிக்கிட்டம், மனிதர், காஞ்சக்கிட்டம், ஆனந்தமூலி

கஞ்சாகம் - தவிடு

கஞ்சாகௌுத்தி - கடல்மீன் (இது செம்மீன் நிறமுடையது)

கஞ்சாங் கோரை - நாய்த்துளசி, திரட்கோரை

கஞ்சாஸ்தி - துத்தநாகம்

கஞ்சாஞ்சிகம் - சேம்பு

கஞ்சாப்பூஞ்செடி - துலுக்கமல்லிகை

கஞ்சாம் - சேம்பு

கஞ்சாரி - நன்னாரிவேர்

கஞ்சான் - கஞ்சாங்கோரை, புங்கு

கஞ்சி - கஞ்சிப்பசை, குழைய வெந்த கஞ்சிக்கூழ், நீராகாரம், நீராய்க் கரைத்த உணவு, சிலந்தி

கஞ்சிகம் - ஒரு சிறிய கொப்புளம்

கஞ்சிட்டி - மஞ்சிட்டி

கஞ்சிம் - சிலந்தி

கஞ்சிரம் - எட்டி

கஞ்சீரம் - பேரீச்சம்பழம்

கஞ்சீவனி - காட்டுக்கடலை

கஞ்சீவி - பூநாகம்

கஞ்சுகம் - சிலந்திக்கோரை, முருக்கு, சிலந்தி, பாம்பின் தோல், பாம்புச் சட்டை, வளையலுப்பு, அதிமதுரம்.

கஞ்சுகன் - வயிரவன்

கஞ்சுகி
கஞ்சுகின் } பாம்பு

கஞ்சுக்கல் - சிலாவங்கக்கல்

கஞ்சுடம் - கம்பு

கஞ்சுரகம் - புல்

கஞ்சுரம் - முருங்கை, முருக்கு

கஞ்சூரம் - பேரீச்சம்பழம்

கஞ்சூரி - பன்றி மொத்தை

கஞ்சோற்பவம் - ஒரு வாசனை மண்

கடகசிங்கி - கற்கடகசிங்கி

கடகடப்பை - வயிற்றிரைச்சல்

கடகம் - பூவாது காய்க்கும் மரம், மலை, மலைப்பக்கம், அத்திமரம், உப்பு, தேற்றதான் கொட்டை, ஒரு பொழுது, பனிரெண்டு இந்துப்பு, கடகமிருகம், பலகை

கடகனாதி - நிலத்துளசி

கடகாதகன் - காக்கை, நரி

கடகோடி - கவிழ்தும்பை

கடக்கண்டு - பூனைக்காலி

கடக்கொடி - தும்பை

கடக்கோடம் - கௌதும்பை

கடக்கோட்டி - தும்பை, கவிழ்தும்பை

கடங்கடம் - மரமஞ்சள்

கடங்கடேரி - மஞ்சள்

கடங்கம் - சாராயம்

கடங்கரம் - உமி

கடங்காலி - கண்டங்கத்திரி

கடசமநாரி - கற்றாழை

கடசம் - சங்குபாஷாணம்

கடசீகம் - கோழிமுட்டை

கடச்சீ - காலாள்

கடஞ்சிகம் - குசப்புல்

கடஞ்சுடபீகம் - புல், செம்பு

கடஞ்சுடப்பிகம் - புல்

கடதிலிமுகம் - குறட்டை

கடத்தல் - நீக்குதல்

கடபகபலம் - பலா

கடபலம் - தேக்குமரம், கல்யாண பூசனி, தேற்றான். பூசனி, மலைபூசனி, தக்கோலம்.

கடபி - வாலுளுவை, சோதிஷ்மதி விதை

கடபுட்பி - சிவப்புநெல், கச்சாலி

கடப்பம் - கடப்பமரம்

கடப்பலா - பெருங்கரந்தம்

கடப்பூவிச்சி - கருநொச்சி

கடப்பைமரம் - ஒருவகைச் சீன மூங்கில் மரம், செங்கடம்பு, குடசப்பாலை, வெள்ளைக் கடம்பு

கடமகாடு - குடம், சரீரம், சுடலை, கடம்பம், வாலுளுவை, யானைமதம்

கடமா - காட்டுப்பசு

கடமி - செங்கடம்பு

கடமுனி - அகத்தியர்

கடமை - காட்டுப்பசு

கடம் - யானைக்கூட்டம், யானைக் கதுப்பு, மோவாய், யானைமதம், உடல், காடு, குடம், தோட்டம், மலைப்பக்கம், காக்கை, பதக்கு, மரமஞ்சள், மயானம்.

கடம்பக்கூனன், **கடம்பக்கூனி** - ஆமை

கடம்பச்சு வேதம் - வெண்கடம்பு

கடம்பம் - வாலுளுவை, கடம்பு, கீரைத்தண்டு, குமிழ்வெண்கடம்பு, வெள்ளைத்தாழ்

கடம்பல் - குமிழமரம், சன்னி நாயகம்

கடம்பார் கச்சம் - ஈசை

கடம்பானை - ஒருவகை கடல் மீன்

கடம்பு - சிறுகடுகு, கருங்குருவை நெல், கடப்ப மரம், குழந்தை பிறந்தவுடன் சுரக்கும் பால், பெருங்கடம்பை, மல்லிகைக் கடம்பு எனும் பன்னீர் மரம், விசாலம் எனும் ஒரு வகைப் பூண்டு, நீர்க்கடம்பு, நிலக்கடம்பு, வெண்கடம்பு, செங்கட்டி

கடம்புதா, **கடம்புதாகூர சீதரம்** - நறுவிலி

கடம்புரி - வெண்கடம்பு

கடம்பூலிகம்- ஆடையொட்டி

கடரம் - யானைமதம்

கடரி - மரமஞ்சள், மிருகங்களின் பெண் இனம்

கடர்கதி - கடல்நுரை

கடலகம் - ஆமணக்கு, ஊர்க்குருவி, நாயுருவி

கடலக்கம் - பேய்முசுட்டை

கடலக்காய் - தேங்காய், மல்லாக் கொட்டை எனப்படும் வேர்க்கடலை

கடலக்கி - பேய்முசுட்டை

கடலக்கினி - கடல்நுரை

கடலஞ்சிகம் - தருப்பை

கடலடக்கி - பேய்முசுட்டை

கடலடம்பு - அடம்பு

கடலடி - இலவங்கம்

கடலடிபுட்பம் - கடலடி, காரம்பூ

கடலடியின் புஷ்பம் - கனம்பூ

கடலடுதிரவியம் - உப்பு, முத்து, பவளம், சங்கு

கடலடைத்தான் - அபின், கஞ்சா

கடலத்தி - காரைச்செடி

கடலம் - ஆமணக்கு

கடலாக்கி - பேய்முசுட்டை

கடலாடி - நாய்க்குரும்பி, நாயுருவி

கடலாமணக்கு - காட்டாமணக்கு, ஆமணக்கு, கடலெள்ளு

கடலாரகம்- ஆவிமரம்

கடலாரை - காட்டாரை

கடலி - மூக்கரட்டை, கடலி, பூவா-
மரம், அடம்பு, சீனப்பூ,
பூங்காலா மீன்

கடலிச்சி - சீனக்கற்பூரமரம்

கடலிப்பூ - அடம்பு

கடலில்கனி - சமுத்திரபழம்

கடலிறாஞ்சி- கடலழிஞ்சிலை

கடலிற்குருவி - கல்லுப்பு

கடலுரிஞ்சி - கடலிராஞ்சி, கடல்
நீர்வாழ் பறவை

கடலுல்லம் - கடலில் வாழும்
உல்லம் எனும் மீன்

கடலுளி - கருவண்டு

கடலூராய்ஞ்சி - கடலிராஞ்சி,
கடல்நீர் வாழ் பறவை

கடலெள்ளு - கடற்கரைகளில் வாழும்
ஒருவகை எள்ளுச்செடி

கடலேலகம் - காரெள்

கடலை - கொண்டைக்கடலை,
காட்டுக் கடலை, ஓர் சிறு
மரம், பல விதக் கடலை
களுக்காகும் பொதுப் பெயர்

கடலைக்கல் - காவிக்கல்

கடலைப்பொன்-துரிசு, கடல்வங்கவுப்பு

கடல் கலக்கி - பேய்முசுட்டை

கடல்கொடி - தும்பை

கடல் கொழுப்பை - எழுத்தாணிப்
பூண்டு

கடல்சாரை - கடற்பாம்பு

கடல்சிரை - கொட்டையிலந்தை

கடல் பஞ்சு - கடல் காளான்

கடல்படு திரவியம் - உப்பு, ஓர்க்கோலை,
சங்கு, பவளம், முத்து

கடல்பருத்தி - சீமைப்பருத்தி

கடல்பற்பப்பூச்சி - ஒரு கடல் மீன்

கடல்மடு - கடலழிஞ்சி

கடல்மா - காட்டுமா

கடல்வங்கம் - வெள்வங்கம்

கடல்வண்டு - குடைவண்டு

கடல்வாழ்காரம் - வெடிகாரம்

கடல்விசிர் - கடல்பவளச்செடி

கடல்விந்து - கடல்நுரை

கடல்விராய்ஞ்சி - கடலாஞ்சி

கடவகம் - நாயுருவி

கடவி - மரமஞ்சள்

கடவிச்சிறுக்கி - ஆமைச்சட்டை

கடவிழி - கலைமான்

கடவிழியோடி - கலைமான் கொம்பு

கடவு - தனக்கு, கடரி (எருமைக்
கடா, ஆட்டுக்கடா),
வயிரை அல்லது அசவை
எனும் பூடு

கடவுகாசிகம் - ஆவாரை

கடவுளம் - தேவதாரம்

கடவுளர்தாரம் - தேவதாரமெனும்
ஒருமரம், காட்டுச் சந்தனம்.
இதற்கு உம்பர் மனைவி
எனவும் பெயர். உம்பர் -
தேவர் - மனைவி தாரம் -
தேவதாரம்.

கடவுளாதாரம் - தேவதாரம்

கடவுளான் - துரிசு
கடவுள் - மவுனி, தேவதாரு
கடவுள் கிருபை - தெய்வ அனுக்கிரகம்
கடவுள்தாரம் - தேவதாரம்
கடவுள் மண்டிலம் - சூரியன்
கடவை - ஊர்க்குருவி, கடவுமரம், விடம், ஏணி
கடவைக்கிரியம் - ஆற்றுமல்லிகை
கடறு - சுரம், காடு, யானை மலைச்சாரல்
கடற்கதி - கடல்நுரை
கடற்கரடி - வெண்கரடி
கடற்கலக்கி - பேய்முசுட்டை
கடற்கலுழி - கடலுராஞ்சி
கடற்கனி - சமுத்திராப்பழம்
கடற்காளான்- கடற்பஞ்சு
கடற்குருமி, கடற்குருவி - கல்லுப்பு
கடற்கேசிதம் - ஆற்றுப்பூவரசு
கடற்கொஞ்சி - சீமைக்கொஞ்சி
கடற்கொடி - தும்பைச்செடி, கடற்றாமரை
கடற்கொடு பாலிகம் - ஆண்வாடைத்தட்டி
கடற்கொழுப்பை - எழுத்தாணிப்பூண்டு
கடற்கோஞ்சி - கோஞ்சி
கடற்கோடு - கடற்கரை, கடலோரம், கடல் நத்தை, கடல் சங்கு
கடற்சீவி - சீந்தில்
கடற்பகை - வெண்கடுகு
கடற்பக்கி - கடற்பட்சி
கடற்பச்சை- சமுத்திரப்பச்சை
கடற்பட்சி, கடற்பாசி - கிளிஞ்சில்
கடற்பலா - பெருங்கரந்தம்
கடற்பாலை - சமுத்திரசோகி
கடற்பூ - செம்மருது
கடற்பொடி - தும்பை
கடற்றாழிகம் - இலைக்கள்ளி
கடற்றாழை - கொந்தாளை, வாட்டாளை
கடற்றிலகம் - நீர்ச்சுண்டி
கடற்றீ - கடல்நுரை
கடன் - அளவு, மரக்கால்
கடா ஆடு - கடாரை, கொப்பரை
கடாசல கண்டி - நெருஞ்சில்
கடாரம் - கொப்பரை, பெருநாரத்தை
கடாரை - கடார நாரத்தை
கடாலவணம் - மிடாலவணம்
கடாவிருட்சம்- எருமைக்கனைச் சான், எருமைக்கடாமரம்
கடி - இடுப்பு, விஷக்கடி, மூக்கரட்டை, கரிப்பு, அத்தி, இரத்தம், சிறுகொடி, கடிதடம், நிதம்பம், பிணம், ஒளி, பொழுது, வாசனை, கூர்மை, பிசாசு, புதுமணம், நந்தவனம், திப்பிலி, கடிவாய்.
கடிகண்டி, கடிகண்டு - பூனைக்காலி

கடிகம் - பிசினி

கடிகரோபி - ஈருள்ளி

கடிகாலி - பூனைக்காலி

கடிகி - நாபி, பன்றி

கடிகிபலம் - சுண்டைக்காய்

கடிகை - நொடி, நாழிகை, துண்டம், அரையாப்பு, சிற்றரத்தை

கடிகோரம் - மூக்கரட்டை

கடிக்குங்குறும்பன் - கட்டெறும்பு

கடிசான்லோகம் - திராய்

கடிச்சகம் - காஞ்சொறி

கடிச்சகாச்செடி - காஞ்சொறிச்செடி

கடிச்சவாய் - பெருக்கு, கற்றாழை

கடிச்சவாய் தடிச்சன் - காஞ்சொறி

கடிச்சவாய் துடைச்சான் - எருக்கு

கடிச்சேபகம் - இலுப்பை

கடிஞ்சாம் - துளசி, கரி, அலரி, கருந்துளசி

கடிதடத்திறைவன் - இலிங்க பாஷாணம்

கடிதடப்புற்று - யோனிப்புற்று

கடிதண்டு - வாழைத்தண்டு

கடிதமாறு - ஊமத்தை

கடிதம் - பிசின், நிதம்பம்

கடிதல் - ஒடுக்கல்

கடிதேயம் - கோரைக்கிழங்கு

கடித்தம் - விளா

கடித்ததூஷன் - தவளை

கடித்தலம் - இடுப்பு

கடித்தான் - கடுக்காய் பிஞ்சு

கடிநம் - சர்க்கரை, பானை

கடிபதை - கடுகு

கடிப்பகை - வேம்பு, கடுகு, வெண்சிறு கடுகு

கடிப்பம் - கெந்தி

கடிப்பாங்கிகம் - குப்பைமேனி

கடிப்பிரட்டம் - யானை

கடிப்பை - வெண்கடுகு, சிறு கடுகு, சிறுதேக்கு

கடிமூலம் - முள்ளங்கிச்செடி

கடியகந்தி - கல்லரளி

கடியகொடிச்சி - பிரண்டை

கடியசிவப்பி - மருதாணி

கடியசெம்பு - கல்லரளி

கடியடி,
கடியடு,
கடியடுத்தன்,
கடியட்டகம் } சிற்றரத்தை

கடியமுதனை - பேரீச்சம்பழம்

கடியரிசி - வாலுளுவை

கடியவல்லாதி - சேங்கொட்டை

கடியவிஷவா - பேய்ப்பீர்க்கு

கடிய விஷத்தி - தேள்கொடுக்கி

கடியன் - ஊறுகாய்

கடியிரத்தம் - மூக்கரட்டை, பெண் குறியினின்றும் ஒழுகும் இரத்தம்

கடிரகசத்தம் - மூக்கரட்டை

கடிரகம் - சரக்கொன்றை

கடிரம் - அல்குல், பெண்குறி

கடிரேக்கா
கடிரேக்கர் } மூக்கரட்டை

கடிரோகம் - மூக்கரட்டை, கோரைக்கிழங்கு

கடிரோமம் - கோரைக்கிழங்கு

கடிலகம் - சாரணை, பாகல், சார்வேளை

கடிலதை - கன்னியாகுமரி

கடிலம் - பாகற்கொடி, மிதிபாகல், மூக்கரட்டை

கடிலா - மூக்கரட்டைப் பூண்டு

கடிலி - மூக்கரட்டை, கடுகு

கடில் - மூக்கரட்டை

கடில்லகம் - துளசி

கடிவால் - கும்மட்டி

கடிவாளப்புண் - கடைவாய்ப்புண், குதிரை கடிவாளப் புண், யோனிப்புண்.

கடிவிஷக்கிழங்கு - மூவிலைக்குருத்து

கடிவிஷத்தான் - செய்யான்

கடிவிஷம் போக்கி - சேங்கொட்டை, பாற்சோற்றி, புளியரணை

கடிவிரணகரி- வாலுளுவை

கடிவீரன் - சின்னவாலுளுவை

கடிவை - யானை

கடினபலம் - விளங்காய்

கடினம் - வெல்லம், அச்சுவெல்லம், ஒருவகை வெற்றிலை, வன்மை, கடுமை, முறைப்பு.

கடு - கடுக்காய் மரம், கசப்பு, கடுகு ரோகணி, நஞ்சு, மாவிலங்கு, முள்ளி, முள், காடு, பாம்பு, முதலை, கார்த்தல், கடுகு, காரம், நெடி, மிக்க வாசனை, நாற்றம், பசி, நெல்லிமரம், கடுமரம், துவர்த்தல், கடுவென்னேவல்.

கடுகசப்பு - கடுக்காய்மரம், நஞ்சு, மிளகு, முள்

கடுகடுக்காய் - நஞ்சு

கடுகதை - கொன்றை

கடுகத்தி - கத்தூரி, எலும்பு, பேயத்தி

கடுகந்தம் - இஞ்சிக்கிழங்கு, வெள்ளைப்பூண்டு

கடுகபலம் - தக்கோலம்

கடுகம் - கோழிமுட்டை, முத்துப் பற்பம், தக்கோலப் பொட்டு, திரிகடுகு, கடுகுரோகணி, மான்-செவிக்கள்ளி, மருக்காரை, கார்ப்பு, காப்பாற்று மருந்து, திப்பிலி, சுக்கு, மிளகு, கடுகு, மோதிரம்.

கடுகரஞ்சம்- கழற்கொடி

கடுகரம் - கடுகுரோகணி

கடுகர் - கடுக்காய்

கடுகன்னம்- கடுகுசாதம்

கடுகாரம் - கடுகுரோகணி, சாதிபத்திரி

கடுகாலி - குன்றிமணி

கடுகாற்செல்லி - சாதிபத்திரி

கடுகாற்சுரை - பேய்ச்சுரை

கடுகி - சுண்டைச்செடி

கடுகிபலம் - சுண்டைக்காய்

கடுகியகாந்தி- இரசிதபாஷாணம்

கடுகியதுண்டி - காட்டாமணக்கு

கடுகிரந்தி - திப்பிலிமூலம், சுக்கு

கடுகிரந்திமூஷ்ணம் - திப்பிலி மூலம்

கடுகீடகம் - கொசு

கடுகீபலம் - தக்கோலம்

கடுகு - கடுகென்னேவல், கடுகுப் பூண்டு, குந்திக்கடுகு, சிறுகடுகு, வெண்கடுகு, செங்கடுகு, நாய்க் கடுகு, பெருந்தேவதாரி, கடுக ரோகணி, மலைக்கடுகு, பேய்ப் புடல், பாகல், பேய்ப்பீர்க்கு.

கடுகுமணி - வெண்கடுகு

கடுகுரோகணி - கடகரோகணி

கடுகெந்த சரூஷ்பம் - கடுகு

கடுகை - கடுகுரோகணி,பேய்ச்சுரை, கடுக்காய், மருந்து, கக்கரிக்காய்

கடுகோதனம்
கடுகோரை } கடுகுசாதம்

கடுகோல் - பாகற்கொடி

கடுக்களா - எட்டி

கடுக்கன் - குப்பைமேனி

கடுக்கன்புல் - புல், ஒட்டுப்புல்

கடுக்காய் - மலமறுப்பவள், தாய்

கடுக்காய் தலைவன் - பாம்பு

கடுக்காய்பூ - கற்கடகசிங்கி

கடுக்கிரந்தி - இஞ்சி

கடுக்கினம் - வெண்கடுகு

கடுக்குமிழ் - நிலக்குமிழ்

கடுக்கை- கொன்றைமரம், மருந்து, சரக்கொன்றை, சடச்சீ, கருவூமத்தை, மருதமரம், கடுக்காய்

கடுக்கொடி - கசப்புக்கொடி, நஞ்சுக் கொடி

கடுங்கண் - ஓலைக்கண்

கடுங்காந்தி- வெள்ளைப் பாஷாணம்

கடுங்காயலகரி - சாதிக்காய்

கடுங்காய் - சாதிக்காய், துவர்ப்புக் காய், முதிர்ந்தகாய்

கடுங்காரக் கூர்மன் - அமுரியுப்பு

கடுங்காரச் சுண்ணம் - கடுஞ்சுண்ணம்

கடுங்காரநீர் - முட்டை

கடுங்காரம் - சாதிபத்திரி

கடுங்காரி - மாங்கிஷபேதி, மிளகு

கடுங்குட்டதாளி - மிளகுதக்காளி

கடுங்குப்பிச்சாரம் - காசிச்சாரம்

கடுங்கும்பம் - தாலம்ப பாஷாணம்

கடுங்கூத்தன் - துரிசு

கடுங்கூர்மை – உப்பு, கடலுப்பு, சிந்துலவணம், அமுரியுப்பு, கந்தகஉப்பு, திலாலவணம், வளையலுப்பு.

கடுங்கொட்டை – காட்டு மாங்கொட்டை

கடுங்கொட்டைமா – கானவம்

கடுங்கோபக்கள்ளி – முண்டணி விருட்சம்

கடுசகரச் சாதகம் – நான்குவகை சரக்குகள் சேர்ந்த கூட்டு, சிறுநாகப்பூ, இலவங்கப் பட்டை, இலவங்கப் பத்திரி, மிளகு

கடுசரம் – கடுகுரோகணி

கடுசாரம் – காசிச்சாரம், கடுகுரோகணி

கடுசித்தாழை – பறங்கித்தாழை, அன்னாசிச்செடி

கடுசிரங்கம்
கடுசிரிங்கம் } கற்கடக சிங்கி

கடுசுரை – கசப்புக் கோவை

கடுச்சதம் – நந்தியாவட்டம்

கடுஞ்சனம் – முருங்கை

கடுஞ்சாரம் – கடுமையான சாரம் அதாவது நவச்சாரம்

கடுஞ்சாரி – நவச்சாரம்

கடுஞ்சித்திரமூலி – நீலக்கொடிவேலி

கடுஞ் சிந்துசாரம் – சிந்துலவணம்

கடுஞ்சினபூமி – உழமண்

கடுஞ்சீதளத்தி – பொன்னாங்காணி

கடுஞ்சீரகந்தம் – கண்சிமிட்டி

கடுஞ்சீலை – கல்மதம்

கடுஞ்சுண்ணத்தி – சீனக்காரம்

கடுஞ்சூல் – முதற்சூல்

கடுடம் – மருக்காரை

கடுஷ்ணா – இருவாட்சி

கடுதலம் – முள்வெள்ளரி

கடுதித்தகம் – கஞ்சா, பேய்ப்புடல்

கடுதித்த காச்சதம் – பேய்ப்புடல்

கடுதித்தம் – பேய்ப்புடல், கருங்கடுகு

கடுதித்தா – வெண்கடுகு

கடுதித்தாசம் – இலைக்கள்ளி

கடுதீட்சணம் – ஓரிதழ்த் தாமரை

கடுதித்தா – வெண்கடுகு

கடுதுண்டி – கசப்புக் கோவை

கடுதும்பி – பேய்ச்சுரை

கடுதுரத்தி – அம்மான் பச்சரிசி

கடுதைலம் – வெண்கடுகு

கடுத்தடகம் – சுக்கு

கடுத்தி – தேள்கொடுக்கி, நாயுருவி

கடுத்திரயம் – நெல்லிக்காய், தான்றிக்காய், திரிகடுகு

கடுத்திராட்சை – சோதிவிருட்சம்

கடுத்தேறு – குளவி

கடுநிம்பம் – நிலவேம்பு

கடுநீர் – அமுரி

கடுந்தணல் கார்த்தி – நாயுருவி

கடுந்தணற்பூமி – உழமண், கடுந்திலாலவணம்

கடுந்தழற்பூமி - உழமண்

கடுந்தி - நாயுருவி

கடுந்திலாதணம்
கடுந்திலாலவணம் } அமுரியுப்பு எள்ளு, குளம்

கடுந்தீபசோதி
கடுந்தீபம் } சோதிவிருட்சம்

கடுந்தெரிலிச்சி - சத்திச்சாரணை

கடுபங்கம் - சுக்கு

கடுபதங்கண் - லவணபாஷாணம்

கடுபத்திரம் - சுக்கு, இஞ்சி, காட்டுத் துளசி, வெண்துளசி

கடுபரிகபாபகம் - பேய்க்கரும்பு

கடுபலம் - இஞ்சி, கருணைக்கிழங்கு, படோலிகை அல்லது முலாம்பழம்

கடுபி - வாலுளுவை

கடுபுடுகொள்ளு - காட்டுக்கொள்ளு

கடுப்படக்கி - வெதுப்படக்கி, எருமுட்டை, பீநாறி

கடுப்பிஞ்சகம் - கோழிமுட்டை

கடுப்பிஞ்சு - கடுக்காய்ப்பிஞ்சு, கசப்புப்பிஞ்சு

கடுப்பிண்டி - இலந்தைமரம்

கடுப்பு - ஊமத்தை, கருஊமத்தை, ஆறாங்காய்ச்சலுப்பு, பிண்டவுப்பு, வயிற்றுக் கடுப்பு, கடுக்காய்வேர்

கடுப்புக்கழிச்சல் - சீதபேதி

கடுப்புத்தோன்றுவான் - செங்குளவி

கடுப்புரசு - வெள்ளைப்புரசு

கடுப்பூ - ஊமத்தை, கடுக்காய்வேர்

கடுப்பேகிகம் - உதிரவேங்கை

கடுப்பை - வெண்கடுகு, கடுகு

கடுமஞ்சரிகை - நாயுருவி

கடுமதுப்பி- கோவை

கடுமம் - மருக்காரை

கடுமரத்தொங்கல் - ரோமவிருட்சம்

கடுமரம் - எட்டிமரம், கடுக்காய், நச்சுமரம், காஞ்சிரை

கடுமலை - காரீயம்

கடுமாசகம் - காஞ்சிரை, எட்டிமரம்

கடுமாலின் நேத்திரம் - கற்றாமரை

கடுமான் - சிங்கம்

கடுமிசம் - உப்பங்கோரை

கடுமுலிக் கொடிச்சி
கடுமுள்
கடுமுன் } கண்டங்கத்திரி

கடுமூலம் - திப்பிலிமூலம்

கடுமேதி - எருமை விருட்சம்

கடும் - நஞ்சு

கடும்பச்சை - நாகப்பச்சை

கடும்பரம் - கடுகுரோகணி

கடும்பரை - கடுகுரோகணி, முதியார் கூந்தல்

கடும்பாரம்- சோதிஷமரம்

கடும்பலம் - இஞ்சி, கருணைக் கிழங்கு

கடும்பால் - ஈன்றணிமைப்பால், எருக்கன்பால்

கடும்பை - வெண்கடுகு

கடும்விலங்கு - மாவிலங்கு
கடுரம் - மோர்
கடுரவம் - தவளை
கடுரோகணி, **கடுரோணி** } கடுகுரோகணி
கடுலன் - கூனன்
கடுலி - மூக்கரட்டை
கடுவகம் - சிலேட்டும நாசினி, மருவகம்
கடுவங்கச்சீலை - சிலாவங்கம்
கடுவங்கம் - இஞ்சி, வேர்க்கொம்பு
கடுவடுகானம் - காட்டுக் கொள்ளு
கடுவட்டத்தீ- ஆமைசட்டை
கடுவணி - கத்தூரி எள்ளு
கடுவயசுகுண்டம் - அயமலை
கடுவல்லகம் - பாகல்
கடுவல்லி - சிறுகுறிஞ்சா
கடுவன் - மாவிலங்கு, குரங்கு, நாய், பூனை, முதலியவற்றின் ஆண், இடுப்பிலுண்டாகும் படை, நெல்லி மரம், கூனன்
கடுவாகம் - புறா முட்டை
கடுவாயன் - கழுதை, பாம்பு
கடுவாய் - நாய், புலிக்குடத்தி, நாய்த்துளசி
கடுவாரத்தகி- வெண்சிறுவழுதலை
கடுவிசக்கிழங்கு - மூவிலக்குந்து
கடுவிடுகனம் - காட்டெள்ளு
கடுவிதித்தம், **கடுவிதித்தல்** } கடுகுரோகணி
கடுவிரணதாக்கினி - கிச்சிலிக்கிழங்கு
கடுவிரிஞ்சபுதிசம் - பேய்ப்புடல்
கடுவுடுகன்- காட்டெள்ளு
கடுவுடுப்பு- மாங்கிஷபேதி
கடுவுதீத்தம்- கடுகுரோகணி
கடுவுப்பு - மாங்கிஷபேதி
கடுவேகன் - நீலபாஷாணம், பொன்னிமிளை
கடுவேகி - சோரபாஷாணம்
கடுவேர் - கடுக்காய்வேர், கடுகு ரோகணி, முள், கசப்பு
கடுவை - செம்பு, யானை
கடூகம் - மருக்காரை
கடூஷணம் - சுக்கு
கடூரசத்தி - மணித்தக்காளி
கடூரி - சதுரக்கள்ளி
கடேரிடம், **கடேரியம்** } மரமஞ்சள்
கடை - பெண்குறி, இறுதி இடம், எல்லை, கீழ்மை
கடைக்கிழஞ்சா மூலி - கருஞ்செம்பை
கடைச்சி - நெட்டி, மருதநிலப்பெண்
கடைச்சித்தாழை - பறங்கித்தாழை
கடைநாள் - மரணகாலம்
கடைப்படி - 16 பலம் கொண்ட அளவு
கடைவள்ளலில் ஒருவன் பல் } ஆனரிப்பல்
கடோரியம் - பாகிமஞ்சள்
கடோரியம்பாகி - மஞ்சள்

கட்கி - பறவைக்கூடு
கட்கிகம் - பெருந்தும்பை
கட்சம் - சங்கபாஷாணம்
கட்சமநாறி - காற்றாழை
கட்சிமா - நிலவேம்பு
கட்சுகாரம் - காசாலிக்கீரை
கட்சுரா - பூனைக்காஞ்சொறி
கட்செடி - சுண்டைச்செடி
கட்செவி - பாம்பு
கட்டகத்தி - வீழி
கட்டகம் - காந்தக்கல்
கட்டகுருசை- சித்திரமூலம்
கட்டஞ்சலி - மூக்கு
கட்டத்தாரி - வெள்ளைப்பூண்டு
கட்டபதி - வெண்கடுகு
கட்டம் - மேவாய்க்கட்டை, மலம், ஏலரிசி, உடம்புவலி, சிரமம், கஷ்டம், கற்றாழை, காடு, பிச்சாங்கட்டி
கட்டவங்கம் - நாய்வேளை
கட்டவிக்கிரகை - காஞ்சொறி
கட்டழல் - நெருப்பு
கட்டாங்கிக் கொட்டை } புங்கன்கொட்டை
கட்டாஞ்சி - வாலுளுவை
கட்டாரி - எழுத்தாணிப்பூண்டு
கட்டானை - சுழல்வண்டு
கட்டிகை - பலப்பக்கல்
கட்டிசருக்கரை - வெல்லம்
கட்டிச்சி - செந்திராய்
கட்டிமாதர் - எலி
கட்டி மூதண்டம் - கொடுக்காய்ப்புளி
கட்டிம்பம் - வெண்கடுகு
கட்டிலிங்கம் - வங்காளலிங்கம், பிறவிலிங்கம், கட்டியலிங்கம்.
கட்டில் - மஞ்சள்
கட்டிவை - யானை
கட்டுக்காடை- பாற்குருவி
கட்டுக்காய் - கடுகுரோகணி
கட்டுசவி - பாம்பு
கட்டுரசம் - சாதிலிங்கம்
கட்டுவங்கம் - வெள்ளாமணக்கு
கட்டுவங்கா வாங்கிஷநாசி - உதிரமாரி
கட்டுவம் - கடுகுரோகணி, கட்டளை
கட்டுவாங்கம் - மலைவேம்பு, பெருமரம்
கட்டுறவி - கட்டெறும்பு
கட்டைக்காலி - கரடி
கட்டையேறி விட்டாய் - நொச்சி
கட்டைவிறகு - பிரேதம், மோசக்கட்டை
கட்பலம் - தான்றி, தேக்கு
கட்பசு - வெள்ளைக்காக்கணம்
கண - கணம், அரிசித்திப்பிலி
கணகாசகம் - யானைக்கற்றாழை கிச்சிலிக்கிழங்கு
கணகாசம் - கருங்கச்சோலம்

கணக்கன் - சண்பகமரம்

கணங்கம் - சுண்ணாம்பு

கணங்காலி - கண்டங்கத்திரி

கணச்சக்கை - கண்டத்திப்பிலி

கணதீபம் - எருக்கு

கணதுரம் - கற்பூரம்

கணத்தாளி - தாளிப்பனை

கணநாதிகை- அழிஞ்சில்

கணபதிதூபம் - வெள்ளெருக்கு

கணபதிபத்திரம், கணபதியணி } அறுகம்புல்

கணபிரகம், கணபிறமம் } அரிதாரம்

கணப்பம் - கோரைக்கிழங்கு

கணப்பூடு - சாணாக்கி

கணமூலம் - திப்பிலிவேர்

கணமூலி - சாணாக்கி, திப்பிலி, பெருந்தும்பை

கணமேக சஞ்சீவி - வனமிரட்டி

கணமேகம் போக்கி - திப்பிலி

கணம் - ஒருனடகநோய், காந்தம், திப்பிலி, முப்பதுகலை சேர்ந்தது

கணம்எட்டு - அட்டகணம், பதினெட்டு கணம், அஷ்டதடகணம்

கணரீபம் - எருக்கு

கணரூபகம் - வெள்ளெருக்கு

கணரூபம் - எருக்கு

கணவசாரம் - நவச்சாரம்

கணவம் - அரசமரம்

கணவலர் - அலரி

கணவன் - சூதபாஷாணம்

கணவிச்சாடம் - துரிஞ்சில்

கணவிரி - அலரி

கணவீரம் - அலரிச்செடி, அலரி, சிவலிங்கமலர், செவ்வலரி

கணா - திப்பிலி

கணாடகம் - மருக்காரை

கணாதி - வெண்சீரகச் செடி

கணி - வேங்கை மரம், வேங்கை, மூங்கில், மருதநிலம், மிளகரணை, சந்தனம், பிரமதண்டு, கையாந்தகரை

கணிகாரிகை - தக்காளி (அல்) நெல்லி

கணிகை - முல்லை, நெல்லி, சதாபலை, காட்டு முல்லை, பெருயேலம், சாதிப்பூ

கணிச்சி - வெற்றிலை

கணிமாசம் - இந்துப்பு

கணியுப்பு - கரியுப்பு

கணுக்கிரந்தி - ஒருமேகநோய்

கணுங்கு - காவட்டம்புல்

கணுமாந்தம் - நகச்சுற்று

கணேரம் - மலைப்புளிச்சை

கணை - பானம், திப்பிலி, கரும்பு, மூங்கில், மனோசிலை

கணைப்பீர் - பெருங்குயில்

கணைசுனையோன் - பேய்த்துவரை

கணைப்புல் - ஒட்டுப்புல்

கணைப்பூடு - திருவாலிப்பூடு, செவ்வாமணக்கு

கணையுறுகொத்து - செங்கொன்றை

கண் - விழி, இடம், மூங்கில், ஈயம், கரும்பு, அல்லி, கணு, துவாரம், தேங்காய்க் கண், நத்தைச்சூரி, பொன்னாங்காணி

கண்செறி - முடி

கண்டகசங்கம் - முட்சங்கு

கண்டக பலம் - பலாப்பழம்

கண்டகம் - நீர்முள்ளி, முள்ளி, மூங்கில்கண், வெள்ளருகு, இலந்தை, பற்படாகம், கருவேல், சிறுதேக்கு, வில்வம், சிறுசெவ்வந்தி, மச்சம், வில்வமரம், காட்டுமுள்ளி

கண்டகாசனம் - ஒட்டகம்

கண்டகாசிதை - இலவு

கண்டகாரி - கண்டங்கத்திரி, சிறுவழுதலை, கற்பூரவழுதலை, வெண்சிறு வழுதலை

கண்டகாரிகை - கண்டங்கத்திரி

கண்டகி - முள்ளிலவு, கருங்காலி, காட்டு வில்வம், காட்டு மாங்காய்

கண்டகிஞ்சுகம் - கல்யாண முருக்கு

கண்டகிபலை - ஊமத்தை

கண்டகோட்சுரம் - நெருஞ்சில்

கண்டகினம் - தண்ணீர்விட்டான்

கண்டகினி - கண்டங்கத்திரி, வழுதலை

கண்டங்கணம் - திப்பிலி

கண்டங்கறை - நல்லபாம்பு

கண்டங்காரி, கண்டங்கார் - கண்டங்கத்திரி கற்கண்டு, சர்க்கரை

கண்டங்காலி - கண்டங்கத்திரி, சறுவார சம்மட்டி, சிறுகாஞ்சொறி

கண்டசுரம் - எட்டி

கண்டச்சங்கு - முட்சங்கு

கண்டச்சிரடம் - மரவட்டை

கண்டதலம் - தாழம்பூ

கண்டதிப்பிலி - வங்காளத்திப்பிலி

கண்டந்திப்பிலி - வங்காளத்திப்பிலி, திப்பிலிமூலம்

கண்டபதம் - பூநாகம்

கண்டபத்திரிக்கம் - கக்கரிக்காய்

கண்டபலம் - இலவு, நெருஞ்சில்

கண்டபீரம் - அலரி

கண்டபுங்கா - முட்காவேளை

கண்ட புங்கிகம் - கண்டங்கத்திரி

கண்டமதுரம் - மாமரம், தேமா

கண்டமாலை விரணம் போக்கி - செம்மந்தாரை

கண்டம் - சர்க்கரை, கழுத்து, வெல்லம், கள்ளி, குன்றி வேர், சாதிலிங்கம், கண்டசருக்கரை, தொண்டை, நிலவேம்பு, நீர்க்குருவி, கண்டங் கத்தரி, துண்டம், துரிசு, கொப்புளம், பேய்க்கீரை வேர்

கண்டரி - கண்டங்கத்திரி

கண்டர் - துரிசு

கண்டர்ரவி - துரிசுச் செம்பு

கண்டலம் - முள்ளி

கண்டலவணம் - பிடாலவணம்

கண்டலி - நீர்முள்ளி

கண்டலிவுச்சு - சாரணை

கண்டல் - தாழை, நீர்முள்ளி, முள்ளிக்கீரை, வெண் கண்டல், காட்டெருமைப் பால், வெண்ணெய், தாது

கண்டற்கியம் - தாழை

கண்டற்குயம் - தாழை, தாழைவிழுது

கண்டாக்கிரி - பட்சி

கண்டாஞ்சி - முள்வேலமரம், செம்மட்டி

கண்டாத்திரி - கஞ்சா

கண்டாரவம் - கிலுகிலுப்பை

கண்டார்வை - கிலுகிலுப்பைச்செடி

கண்டாலம் - ஒட்டகம்

கண்டாலி - வெள்ளெருக்கு

கண்டி - சிறுகீரை, கண்டங்கத்திரி, சதுரக்கள்ளி, வெண்கடுகு

கண்டிதம் - நீர்முள்ளி

கண்டிரசபுரடு, **கண்டிரசபுரூடு** } கள்ளி

கண்டிரமகாமூசனி - செவ்வியம்

கண்டிரம் - சதுரக்கள்ளி, செவ்வியம், பிரம்மகள்ளி

கண்டிரர் - சதுரக்கள்ளி

கண்டிரவம்- சதுரக்கள்ளி, சிங்கம்

கண்டிரை - செவ்வியம்

கண்டிலை - சிறுகீரை

கண்டிலைப்பாலை - காட்டலரி

கண்டில் - ஆறுமாதத்து வெண்ணெய்

கண்டீரதம், **கண்டீரவம்** } சதுரக்கள்ளி

கண்டு - கழலைக்கட்டி, கற்கண்டு, கண்டங்கத்திரி, சொறி, பரு, சிரங்கு, கட்டி, கண்டு பாரங்கி, ஆமையோடு, காஞ்சொறி, நாகப்பூச்சி

கண்டுகணம் - சிறுதேக்கு

கண்டுகத்தரி - ஈனாக்கத்திரி

கண்டுகம் - மஞ்சிட்டி, கற்கண்டு

கண்டுகரி - பூனைக்காலி

கண்டுகாசி - எலியாமணக்கு

கண்டுக்கி - கருப்புவாகை

கண்டுசரீரை - பூனைக்காஞ்சொறி

கண்டுச்சோளம் - வெள்ளைச்சோளம்

கண்டுண்மல்லி - எலி

கண்டுதி - காஞ்சொறி

கண்டுதுத்தி - வட்டதுத்தி

கண்டுத்தி - துத்தி

கண்டுநீர்மூலளம் - செயிலகம்

கண்டுபறங்கி - சிறுதேக்கு

கண்டுபாரங்கி - பஞ்சமூலத்தொன்று, சிறுகாஞ்சொறி, சிறுதேக்கு

கண்டுமாலம் - நெல்லி

கண்டுமூலம் - சிறுதேக்கு, திப்பிலி, கண்டுபரங்கி, அஷ்டமூலம்

கண்டுரம் - தினவு, ஓர் நாணல், பாகற்காய்

கண்டுரா - பூனைக்காலி

கண்டுலுத்தி - கட்டுமரம்

கண்டூ - தினவு

கண்டூகம் - மஞ்சிட்டி

கண்டூதி - காஞ்சொறி, தினவு

கண்டூபதம் - மண்ணுண்ணிப் பாம்பு

கண்டூயம்
கண்டூயை } தினவு

கண்டூரம் - காஞ்சொறி, கண்டா விழ்தம், பூனைக்காலி

கண்டூரை - பூனைக்காலி, காஞ்சொறி, பூனைக் காஞ்சொறி

கண்டோஷம் - தேள்

கண்டோர் கடம் - தவன சக்களத்தி

கண்ணஞ்சினம் - நீலாஞ்சனம்

கண்ணரை - அகலம்

கண்ணனிட மூலி - துளசி, விஷ்ணுகிரந்தி

கண்ணன் - கையாந்தகரை, சோரபாஷாணம்

கண்ணன் கற்பம் - மயிலாரை

கண்ணன் பட்சி - கருடன்

கண்ணன் மூலி - கையாந்தகரை, மின்மினிப்பூச்சி, துளசி, விஷ்ணுகிரந்தி

கண்ணா - திப்பிலி, தில்லை

கண்ணாகுலி - பெரும்பலா

கண்ணாசனி - செந்திராய்

கண்ணாடம் - திப்பிலி

கண்ணாடி - நகம், மின்மினிப்புழு, மின்மினிப்பூச்சி, மின்னிப்பூச்சி

கண்ணாடியிலை - வாழையின் ஈற்றிலை, சுந்தரிமரம்

கண்ணாயருடம் - செந்நாய்

கண்ணி - பொன்னாங்காணி, மாலை, கரிசலாங்கண்ணி

கண்ணிகம் - மணித்தக்காளி

கண்ணிகா - மூக்கரட்டை

கண்ணிகாரம் - காட்டிலவு

கண்ணிசி - காஞ்சொறி

கண்ணிகை - தாமரைக்கொட்டை

கண்ணிக்காரம் - குரங்கு

கண்ணிமயக்கி - தொடரிப்பூடு

கண்ணியம் - மரமஞ்சள்

கண்ணிற்காசணிகம் - அம்பர்

கண்ணிற்கினியான் – கரிசலாங்கண்ணி, பொன்னாங்காணி

கண்ணிறம் – சங்கு

கண்ணீர்குடை – மூக்கரட்டை

கண்ணுகம் – குதிரை

கண்ணுக்காசான் – துரிசு

கண்ணுக்கினியான் – பொன்னாங்காணி, கரிசலாங்கண்ணி

கண்ணுடைமூலி – விஷ்ணுகிரந்தி

கண்ணுதலோன் – வெளுப்பு ரசிதம்

கண்ணுப்பேரிகம் – இருவாட்சி

கண்ணெஞ்சம் – மனோசிலை

கண்ணோவுப்பூண்டு – காந்தள்

கண்படை – நித்திரை

கண்பிசைந்த முகிறோன் – பேய்த்துவரை

கண்பிளைச் செடி – பெரும்பூம்பாதிரி

கண்பு – சம்பங்கோரை

கண்பீர் – சதுரக்கள்ளி, அலரி

கண்மடை – சிறுமடை

கண்முதல் – வெள்ளுள்ளி

கண்மூலம், கண்மூலி – சாணாக்கி

கண்வலர் – அலரியும், காக்காணமும்

கண்வலிப்பூ – நந்தியாவட்டைப்பூ

கண்வளர்தல் – நித்திரை

கண்வாயோடு – கடல்நுரை

கண்வீரம் – அலரிப்பால்

கத – செங்கோஷ்டம்

கதகம் – தேற்றான்மரம், தேற்றாங்கொட்டை, கதலி, உட்டிணம், நோய்

கதகா – தேற்றாங்கெட்டை

கதகாதி – தேற்றான்விரை

கதகை – அஷ்டிமதுகம்

கதசம் – வெள்வேல்

கதண்டு – கருவண்டு, நீர்நிலைகளின் கரையருகிலுள்ள விழிலின் மீதிருக்கும் நுரை

கதத்திராணை – புங்கு

கதமாலம் – நெருப்பு

கதம் – பாம்பு, கோபம், மரம்

கதம்பகச்சம் – பேய்ப்பீர்க்கு

கதம்பகம் – நிலக்கடம்பு

கதம்பசிவம் – கடம்பு

கதம்பபுட்பம் – ஈகை

கதம்பபுட்பி – இண்டங்கொடி

கதம்பம் – வெண்கடம்பு, நிலக்கடம்பு, கடம்பு, வாசனைப் பொடி சாலாங்க பாஷாணம்

கதம்பரி – தேற்றான்

கதம்பாரி – தேற்றாமரம்

கதம்பு – கடம்பு

கதம்பை – ஒருவகைப்புல், வைக்கோல்

கதம்பையுப்பு – சக்தியுப்பு

கதம்போனி – நீர்க்கடம்பு

கதம்வதம் – கடுகு

கதரம் - வெள்வேல்

கதரி - புல்லூரி

கதலம் - வாழை, தேவி, தேற்றான்மரம், ஆலம் விழுது, துகிற்கொடி

கதலி - வாழை, துகிற்கொடி, தேற்றாமரம், கற்பூரம், காற்றாடி, பச்சைக் கற்பூரம்

கதலிகந்தம் - வாழைக்கிழங்கு

கதலிகம் - தேற்றான்

கதலிச்சி - கற்பூரம்

கதலிதனம் - வாழைக்குலை

கதலித்தளம்- வாழைஇலை

கதலித்துருமம் - தான்றிமரம்

கதலிப்பூ - பச்சைக்கற்பூரம், கற்பூரம்

கதலிமலடி - ஒரு குழந்தை பெற்று அதுவும் இறந்துவிட மலடி எனப்பெயர் எடுத்தவள்

கதலியுப்பு - பச்சைக்கற்பூரம்

கதலிவஞ்சி - நவரைவாழை

கதளகம், **கதளசம்** - வாழைமரம்

கதளை - வாழை

கதாகுவயம் - கோட்டம்

கதாயுதன் - பெண் நாய்

கதிக்கும்பச்சை - நாகப்பச்சை

கதிக்கை - கருக்குவாலி

கதிச்சணம் - காட்டுத்துளசி

கதிபோயம்பம் - நீர்வேம்பு

கதிரகை - தொட்டால் சிணுங்கி

கதிரதகாலி- கோதுமை

கதிரபலம் - கருங்காலிப்பிசின்

கதிரப்பார் - தாமரை

கதிரம் - தரம், காசுக்கட்டி, வெண் கருங்காலி, கருங்காலிமரம், அம்பு, வெள்வேல்

கதிரர், கதிரவம் - கருங்காலி

கதிரவல்லி- ஈயக்கொடி

கதிரவன் - எருக்கு

கதிரவன்நாள் - ஞாயிற்றுக்கிழமை

கதிரவன்பால் - எருக்கம்பால்

கதிரவன் இலை (பேர்கொண்ட இலை) - எருக்கன் இலை

கதிராசிதம்- வெள்வேல்

கதிரி - முத்திருக்கஞ்செவி, தகரி

கதிரிநாயகன் - காட்டுச்சீரகம்

கதிரை - வறட்சுண்டி, தொட்டாற் சிணுங்கி, நிலவேம்பு

கதிரோஷ்டம் - திலகம்

கதிரோன் - சூரியன், வைரியம்

கதிர் - கருங்காலி, துவரை, சூரியகாந்தி, கிரணம்

கதிர்ச்சிலை - சூரியகாந்தக்கல்

கதிர்நேசமருவகம் - கஞ்சாங்கோரை

கதிர்ப்பகை - அல்லி, கதிர்ப்பாரி

கதிர்ப்பாரி, கதிர்ப்பாரை - தாமரை

கதிர்வல்லி- ஈகை

கதிர்வனை- மொச்சைக்காய்

கதிர்விரிக்கும்பாணி - நிலம், நிலத்தடிபொருட்கள்

கதிர் விரியும் பாணி - கோமேதகம்

கதிர்வேல் வாகனம் - மயில் (இங்கு மருந்திற்காகும் மயிலிறகைக்குறிக்கும்)

கதிர்னோ மருவகம் - கஞ்சாங்கோரை

கது - வெடிப்பு, வடு, பரு

கதுண்ட கெந்தி - கோழித்தலைக் கெந்தி

கதுப்பு - மஞ்சள், மயிர், யானை-மதம், கவுள்

கதுப்போதி - மயிர்

கதுவாலிபுடம் - மூன்றெரு, எருப்புடம் (வரட்டி)

கதை - கோட்டம்

கத்திகலக்கி - கழுதைலத்தி

கத்தசம் - சாணம்

கத்தசிகம் - இலைப்பாசி

கத்தண்டுலம் - வாய்விடங்கம்

கத்தபம் - கழுதை

கத்தம் - தோள், சாணி

கத்தரி - கண்டங்கத்திரி

கத்தரிக்குண்டான் - வெள்ளரி

கத்தரிநாயகம் - யானைச் சீரகம், (அல்) பெருஞ்சீரகம்

கத்தரிநாயகன் - காட்டுச்சீரகம்,

கத்தரியம் - ஆடுதின்னாப்பாளை

கத்தா - தேற்றான்கொட்டை, நறுந்தாளி, நாட்டுவாதுமை

கத்தாளை - சத்திசாரணை

கத்திகை - சிறுகொடி, கருக்குவாளி

கத்திட்சணம் - காட்டுத்துளசி

கத்திநுணா - நிலவேம்பு

கத்தியிலை - அரிவாள்மனைப் பூண்டு

கத்தியேத்தம், **கத்தியோதம்** } மின்மினிப்பூச்சி

கத்தியோராரி - வேம்பு

கத்திரணம் - காவட்டம்புல்

கத்திரி - ஓர்பாம்பு, நாய்வேளை, கொளுஞ்சி, வழுதுணை

கத்திரிகுண்டன் - வெள்ளரி

கத்திரிசன், **கத்திரிணி** } மிளகு

கத்திரிநாயகம் - யானைச்சீரகம்

கத்திரிநாயகன் - காட்டுச்சீரகம், யானைச்சீரகம்

கத்திரியம் - ஆடுதின்னாப்பாளை

கத்தினானா - நிலவேம்பு

கத்தீரணம் - காவட்டம்புல்

கத்துருகம் - குதிரை

கத்துருபம் - குதிரைபல் பாஷாணம்

கத்ரேகம் - இலந்தை

கத்தூரிகை - வால்மிளகு

கஸ்தூரி கொம்மட்டி - வெள்ளரி

கஸ்தூரி நீலி - அவுரி

கஸ்தூரி மஞ்சள் - காட்டுமஞ்சள்

கஸ்தூரி ரோஜா - சாதிபத்திரி

கத்தேணி - மணித்தக்காளி

கத்தை - கழுதை

கத்தோல் - உளுந்து
கஸ்தோவர் - ஊமத்தை
கநகமலை - மேருமலை
கநகமிளகு - வால்மிளகு
கநகம் - பொன்
கநகரசம் - பொன்னரிதாரம்
கநகாமிர்தம் - வெள்ளி
கநஸ்காய் - ஊமத்தை
கநசாகம் - இரசம், கற்பூரம், நீர்
கநசாரம் - கற்பூரம்
கநச்சாயை - அளிமரம்
கநப்பல்லவம் - வெண்முருங்கை
கநலைக்கந்தை - பேரீச்சு, மலை மாங்காய்
கநீயசம் - தாமிரம்
கநீயசி - செடி
கந்தகட்பலம் - தான்றி
கந்தகபாஷாணம் - வசம்பு
கந்தகணம் - தேற்றான்கொட்டை
கந்தகம் - கொத்தான்விரை, நரி, தாமரைவிதை, கெந்தி, முருங்கை
கந்தகரசாயனம் - ரசம், உப்பு, நெல்லிக்காய் கந்தகம்
கந்தகற்பம் - மலைவில்வம்
கந்தகாப்பிரகம் - மஞ்சள் அப்பிரகம்
கந்தகாரி - வறட்சுண்டி, தொட்டாற் சிணுங்கி
கந்தகி - சங்கஞ்செடி
கந்தகுடம் - ஆப்பிள்பழம்
கந்தகுடி - மருக்கொழுந்து, மிருதார் சிங்கி
கந்தகேடம் - கற்பூரப்புல்
கந்தங்குலி - மிளகு
கந்தங்குவளம் - மெழுகு
கந்தசட்சகம், கந்தசட்சம் - தமரத்தை
கந்தசாயை - புளியமரம்
கந்தசாரம் - சந்தனம்
கந்தசாலி - உயர்ரகநெல்
கந்தசுக்கிலம் - அதிவிடையம்
கந்தசூலிகம் - ஈரவெங்காயம்
கந்தசைலம் - கெந்தகம்
கந்த சௌந்தர்யம் - கப்பலலரி
கந்தடம் - வெண்குவளை
கந்ததாரம் - மது, தேன்
கந்ததாரை - காஞ்சொறிவிதை
கந்ததார்வை - வெள்ளெருக்கஞ்செடி
கந்ததாளி - அட்சரநோய்
கந்ததி - பொன்
கந்ததூர்வை - வெள்ளெருக்கஞ்செடி
கந்ததோயம் - பன்னீர்
கந்தத்துவக்கி - பொந்துகமரம்
கந்தநாகுலி - செவ்வியம், மிளகு, அரத்தை, மிளகுச்செடி, ஒருவகைபூண்டு, மாசிபத்திரி
கந்தநாகுலியம் - அரத்தை, பேரரத்தை
கந்த நாகுனி - தும்பராஷ்டகம், சற்பப்பட்சி

கந்தநாவியம் - அரத்தை
கந்தபத்திரம் - வெண்டுழாய், விளா, வெண்துளசி
கந்தபத்திரிகம் - தக்காளி
கந்தபந்து - மாமரம்
கந்தபலாசி - கற்பூரக் கிச்சிலி கிழங்கு
கந்தபலாசிகம் - பூசுமஞ்சள்
கந்தபலை - விளா, வில்வமரம், வெந்தயம், நிலப்பூசனை, குங்கிலிய மரம்
கந்தபாஷாணம் - வசம்பு, கெந்தகம்
கந்தபிண்டிதகம் - தித்தகோசாதகி, பேய்ப்பீர்க்கு
கந்தபிலவம் - நிலத்துளசி
கந்தபுஷ்பகம் - புளிநாவல்
கந்தபுட்பம் - வெள்ளுமத்தை, அழிஞ்சல்பூ
கந்தபுஷ்பாணி - கெந்தகபாஷாணம்
கந்தபுஷ்பி - மெருகன் கிழங்கு, மெருகன் கிழங்குச் செடி, வெருக்குப்பூடு
கந்தபுட்பை - புவரி
கந்தபூசியம், **கந்தபூதியம்** } நாய்வேளை
கந்தபூரி - மரிக்கொழுந்து
கந்தமம் - வசம்பு
கந்தமாஞ்சி - சடாமாஞ்சில்
கந்தமாலை - அரக்கு
கந்தமூலகம் - நெல்லி
கந்தமூலம் - கிழங்கு, அரத்தை, குங்கிலியமரம், முள்ளங்கி
கந்தமூலி - சிறு இண்டங்கொடி
கந்தமூக்ஷி - மூஞ்சூறு
கந்தமூலிகை - பெருங்கச்சோளம்
கந்தமூளை - வெளிர்த்தாமரை
கந்தமோகினி - சண்பகமொக்கு
கந்தம் - சாரணை, கிழங்கு, கருணைக்கிழங்கு, கழுத்தடி, கிழங்கின்பொது, வெண்காயம், சந்தனம், அகிற்கட்டை, கரளை, தாமரை, தான்றிமரம், முருங்கை, கற்றாழை, ஐம்புலன்களில் ஒன்று, வாசனை, வசம்பு, உள்ளி, சாலங்க பாஷாணம், கரணை, மணம், இந்திரியம், சந்தனக் குழம்பு, வெள்ளைப் பூண்டு, மயிர்மாணிக்கம், பாஷாணம்.
கந்தயோகிக்கிரியம் - கெந்தகம்
கந்தயோக்கியம் - விளாத்தி
கந்தரகாண்டம், **கந்தரக்காட்டம்** } வெள்ளைப் பாஷாணம்
கந்தரசபரச்சி - அப்பிரகபாஷாணம்
கந்தரசம் - போளம், சந்தனம், விளாத்தி
கந்தரசு - சாம்பிராணி

கந்தரம் - தான்றிக்காய், கடற்பாசி, புனல் முருங்கை, கழுத்து, கடுக்காய், கற்கடக பாஷாணம், தீமுறுகற் பாஷாணம்

கந்தராசம் - சந்தனம்

கந்தராசனம் - சந்தனம், ஒருவகை மல்லிகை

கந்தராளம் - மலைக்கோங்கு, பச்சை குருபாலை, கலத்துள்ளி

கந்தருசை - வாளை

கந்தருவம் - குதிரை

கந்தருவன் - குயில், குதிரை

கந்தருவா - ஆமணக்கு

கந்தரூபம் - வைடூரியம்

கந்தரேணுகை - கத்தூரி

கந்தலைக்கெந்தி - கெந்தகம்

கந்தவகம் - காது, மூக்கு, காற்று, செங்காந்தள்

கந்தவகன் - காற்று

கந்தவசம் - மூக்கு

கந்தவாகம் - வாயு

கந்தவாகனடக்கி - வாதமடக்கி

கந்தவாகன் - காற்று

கந்தவாகை - மூக்கு

கந்தவிதாரிகை - புனுகுசட்டம்

கந்தவேணி - கத்தூரி

கந்தளம் - தளிர்

கந்தளி - தினையரிசி

கந்தற்கூபம் - யோனி

கந்தறுவா - ஆமணக்கு

கந்தனுப்பு - கல்லுப்பு

கந்தனை - சிற்றரத்தை

கந்தன் - சூதபாஷாணம், சீர்பந்த பாஷாணம்

கந்தா - தான்றி

கந்தாங்கம் - பெருங்கிச்சிலி, கெந்தகம்

கந்தாசலம் - கெந்தக பாஷாணம்

கந்தாத்திரி - நெல்லி

கந்தாயம் - பேய்ப்புடல்

கந்தாராம் - இரசம்

கந்தாரி - தும்பை, பேய்ப்புடல்

கந்தாவம் - குயில்

கந்தி - கந்தகபார்ஷாணம், பேய்ப்புடல்

கந்திகலைச்சி - பச்சைக்கல்

கந்திகை - சிறுதேக்கு, துளசி

கந்தித்தம் - சீலை

கந்தியுப்பு - கந்தகவுப்பு

கந்திரதாரி - பச்சை மரகதம்

கந்திலம் - ஒருவகை முருங்கை, தூதுவளை

கந்திவாருணி - பேய்த்தும்மட்டி

கந்திணி - ரேணுகை, முரவென்னும் வாசனைத் திரவியம்

கந்து - யாக்கையின் மூட்டுச் சந்து,கழுத்தடி, தாளிசம்

கந்துகம் - குதிரை, தான்றிமரம், தான்றி

கந்துபரிச்சுனை - பூசனிக்காய்

கந்துளம் – பெருச்சாளி
கந்துள் – கரி
கந்தேறு, கந்தேறுகம் – கோடகசாலை
கந்தை – கருணைக்கிழங்கு, கருணை, மலட்டுப் பாகல், ஓமம்
கந்தை சடகம் – தமரத்தை
கந்தோடம் – கருங்குவளை, வெண்குவளை
கந்தோதகம் – தாமரை
கந்தோதம் – தாமரை, நீலோற்பலம்
கந்தோலிகம் – செஞ்சூரை
கந்தோத்கடம் – மருக்கொழுந்து
கந்தோத்தமை – கள்
கந்தோபலம் – கெந்தகம்
கந்நி – கற்றாழை, கெந்தகம்
கந்நிகாரம் – கோங்கிலவு, இலவு
கந்நிகை – பூவரும்பு, தாமரைக் கொட்டை
கபகம் – கமுகு
கபக்காய் – தேங்காய்
கபக்கினி – சிகப்பு, சாறுவேளை
கபங்கோரை – கோரை
கபசம் – மருக்காரை
கபடகச்சு – வேளை
கபடகரம் – கொடிவேலி
கபடாதி – புளிவசலை
கபடுரத்தி – சிற்றரத்தை
கபடேரிகம் – அகில்
கபத்தம் – துளசி
கபத்தின் நாசினி – கடுக்காய்
கபநாசம் – தூதுவேளை, கண்டங்கத்திரி, கரிசாலை
கபநாசினி – தேற்றான் வித்து
கபநீலதீபனம் – ஆதளை
கபந்தாளி – தாளி
கபபித்தகரம் – வெண்ணெய்
கபமகற் பங்குடோரி, கபமறுக்குங் குடோரி – யானைத்திப்பிலி
கபமோதா – பிரண்டை
கபம் – கோழை
கபம்பம் – வாலுளுவை
கபரி – பெருங்காயம், பால் துத்தம், வேளை
கபரியம்பரிதுங்கி – நாய்வேளை
கபர்த்திகா – பலகரை
கபலகலஞ்சாளி – குமிழ்
கபலாக்கினி – ஈருள்ளி
கபலாத்தி – ஆவிரை
கபவாதகிது – மாகாளிக்கிழங்கு
கபவாதநாசினி – அரத்தை
கபவாதமறி, கபவாதமறியான், கபவாதமிறயான் – கொடுக்காய்ப்புளி
கபவிஷபாகம் – வன்மரை, ஓரிதழ்த் தாமரை

கபவிரணகரி– ஆட்டுச்செவி

கபவிரோதி – சிற்றரத்தை

கபவுதிரநாசினி – அரத்தை

கபளி – முழங்கை

கபனி – காகோளி

கபாடக்கட்டி, **கபாடமீட்டி** } வசம்பு

கபாப்சீனி – சீனமிளகு

கபாலகாந்தி – ஆவிரை

கபாலபாஷாணம் – சீர்பந்த பாஷாணம்

கபாலபாணியோன் – சிவனார் வேம்பு

கபாலமேனியோன் – சிவனார் வேம்பு, சீர்பந்தபாஷாணம்

கபாலம் – தலைமண்டை, மண்டையோடு

கபாலலாடம் – கலுவம்

கபாலவம் – ஈரப்பலா

கபாலவாடை – தலைநோய்

கபாலன் – சீர்பந்தபாஷாணம்

கபாலி – சிவனார் வேம்பு

கபாலிகம் – பல்சொத்தை

கபாவேகி – தேவதாரம்

கபானிலக்கினம் – மான்செவிக்கள்ளி

கபி – குரங்கு, செஞ்சந்தன-மரம், யானை

கபிகச்சுகம் – கரும்பூனை காஞ்சொறி

கபிகாண்டவம் – செந்தகரை

கபிசை – ரேணுகை

கபிச்சம் – அமபாளம்

கபிஞ்சலம் – காடை, ஆந்தை, சாதகப்புள்

கபிதசீரம், **கபிதம்** } கருஞ்சீரகம்

கபிதனம் – மாங்காய், குறுவாழை, வாகை

கபிதாத்திரி– நெல்லி

கபித்தகம் – நீர்விளா

கபித்தபத்திரை – தார்

கபித்தம் – கொட்டிக்கிழங்கு விளா, விளாமரம்

கபித்தலம் – விளாமரம்

கபிலா – புளிமுந்திரி

கபிலபுட்பம் – நுணா

கபிலை – பெண்யானை, பசு, கடவுள், வேணுகை, தக்கோலம், கருந்திராட்சை

கபிலோகம் – பித்தளை

கபிவல்லி – யானைத்திப்பிலி

கபிஷடம் – பாலைமரம்

கபீதகம் – மரக்கால்

கபீதனம் – வாகை

கபீந்திரியம் – புனம்புளி, கொடுக்காய்ப்புளி

கபீர் – அலரி

கபுகு – கமுகு, கொட்டைப்பாக்கு

கபோகரனா – பாற்சோற்றி

கபோசிடம் - பிறாமுட்டி
கபோணி - முருங்கை
கபோதகம் - புறா, பிராச்செடி
கபோதகாஞ்சனம் - சுரோதாஞ்சனம்
கபோதசாரம் - ஓர் அஞ்சனக்கல்
கபோதம் - கரும்புறா, புறா, சூரியகாந்தம்
கபோதவங்கம் - மண்டூகவல்லாரை சூரியகாந்தி
கபோத வர்ணன் - சிற்றேலம்
கபோத வள்ளி - ஏலம்
கபோதாங்கிரி - பவழம்
கபோதாஞ்சனம் - அஞ்சனக்கல்
கபோதை - மகிழமரம், புறா
கபோத்தம் - சூரியகாந்தி, வல்லைக்குரை
கப்பகம் - மஞ்சள்
கப்படம் - சீலை
கப்பட்டி - குதிரைப்பல் மெழுகு
கப்பம் - மஞ்சள், வாலுளுவை
கப்பலரி - ஒருவகை அலரி
கப்பல்கதலி - வாழையின் வகை
கப்பல்துறச்சி - சாதிக்காய்
கப்பல்மிளகு - மிளகாய்
கப்பல் வழங்கினோன் - நவச்சாரம்
கப்பல் வள்ளிக் கிழங்கு - பூச்சர்க்கரைக் கிழங்கு
கப்பற்கடலை - பெருங்கடலை, பட்டாணிக்கடலை
